# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1805/38 - 2013 අප්‍රේල් මස 12 වැනි සිකුරාදා - 2013.04.12

*1805/38 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், களுத்துறை நகர சபைக்கு உடைமையானதும், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான காணியினை இன்றில் இருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.*

*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,*
*இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,*
*கொழும்பு 03,*
*2013, பெப்புருவரி 26.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை பிரதேச செயலாகப் பிரிவிலுள்ள களுத்துறை நகர சபை எல்லையுள் அமைந்துள்ள களுத்துறை தேசஸ்தர கிராமத்தில் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. ஜயசிறி கொடிகாரகே என்பவரால் 1998.03.15 என திகதியிடப்பட்ட மாதிரிப்பட இல. 2535 இல் காட்டப்பட்டுள்ள 0.14164 ஹெக்டேயார் (00ஏ. 01றூ. 16 பேர்ச்சஸ்) விஸ்தீரண, கடற்கரை வீதி, கலிடோ வாடி வீடு என்றழைக்கப்படும் காணியாகும். மேற்குறிப்பிட்ட காணியானது பின்வருமாறு சூழப்பட்டுள்ளது.*

*காணியின் விபரங்கள் மற்றும் எல்லைகள் பின்வருமாறு :-*

*வடக்கு : துடுவேவத்தை காணித்துண்டு இல. "1A" கடற்கரை வீதியில் மதிப்பீட்டு இல. 102 இனைக் கொண்டுள்ளது ;*
*கிழக்கு : கடற்கரை வீதி ;*
*தெற்கு : கடற்கரை வீதி ;*
*மேற்கு : கடற்கரை வீதி.*

*4- 857*